**கவனிக்க.-** (i) *2023.02.03 ஆந் திகதிய 2318 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*
(ii) *இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2023 ஆம் ஆண்டுக்கான காலி மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2319 - 2023 පෙබරවාරි මස 10 වැනි සිකුරාදා - 2023.02.10

*2319 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 226 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 229 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 230 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** இலங்கை பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2023, பெப்புருவரி 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, மாச்சு மாதம் 03ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


225 - B 082427 - 5,403 (2023/02)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

விலைமனுக்களுக்கான அழைப்பு

மத்திய மாவட்டத்தில் புத்தளம் லேன் இற்கு 4500 கியூப் Track Ballast வழங்கல்

பெறுகை இல. SRS/ F.7897

1.தேசிய போட்டி அடிப்படையில் கீழ்க்காணும் இடங்களுக்கு Track Ballast களை வழங்குவதற்காக, வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை, இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக்குழு ( உயர் மட்டம்) தலைவர் பெற்றுக் கொள்வார்.

இந்த விலைமனுக்கள் கீழே குறிப்பிடப்படும் ஒவ்வொரு இடத்திற்கும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்படும்.

| உருப்படி இல. | அமைவிடம் | கியூப்களின் எண்ணிக்கை | வழங்கல் கால எல்லை (மாதங்கள்) |
|---|---|---|---|
| 01. | நாத்தாண்டிய களஞ்சியம் | 500 | 04 |
| 02. | குடாவெவ களஞ்சியம் | 1000 | 08 |
| 03. | சிலாபம் களஞ்சியம் | 500 | 04 |
| 04. | பங்கதெனிய களஞ்சியம் | 500 | 04 |
| 05. | முந்தல் களஞ்சியம் | 500 | 04 |
| 06. | பாலாவி களஞ்சியம் | 500 | 04 |
| 07. | புத்தளம் களஞ்சியம் | 1000 | 08 |

2. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 21,875.00 ரூபாவைச் செலுத்திய பின்னர், 2023.02.20 ஆந் திகதியன்று பி.ப. 3.00 மணி வரையும் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. விலைமனுக்கள் 2023.02.21 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

4. விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 1,125,000.00 ரூபா பெறுமதியான தொகைக்கான விலை மனுப் பிணையொன்று விலைமனுவுடன் முன்வைக்கப்படல் வேண்டும்.

5. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், உடனடியாகவே இலங்கை புகையிரத சேவைகளின் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

6. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படலாம் அல்லது நேரடியாகவே பின்வரும் முகவரியில் ஒப்படைக்கப்படலாம்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு, (உயர் மட்டம்),
பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகம்,
இலங்கைப் புகையிரத சேவைகள்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

7. பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பின்வரும் வழிகளினூடாக தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள்: 011- 2438078 ,2436818
அல்லது 011-4600209
தொலைநகல் இலக்கம்: 011- 2432044
மின்னஞ்சல் : srs.slr@gmail.com /
tender2@railway.gov.lk
இணையத்தளம் : www.railway.gov.lk

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு
( உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறிப்பீடு இல.: SRS/ F.7897.

02- 113

---

## இலங்கைப் புகையிரத சேவைகள்

விலைமனுக்கான அழைப்பு (IFB)

மேல் மாவட்டத்தின் வட்டவல முற்றவெளிக்கு புகையிரதப் பாதை தண்டவாளங்களைப் பரீட்சிப்பதற்கு EN 45 E1 தண்டவாளங்களுக்கான 4000 எண்ணிக்கையான குறைந்த உயரமுடைய கொங்கிறீட் சிலிப்பர்களை வழங்குவதற்கான பெறுகை.

பெறுகை இல.: SRS F. 7898

1. இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்களக் கொள்வனவுக் குழு (மேஜர்) தவிசாளர், வட்டவல முற்றவெளிக்கு

புகையிரதப் பாதை தண்டவாளங்களைப் பரீட்சிப்பதற்கு EN 45 E1 தண்டவாளங்களுக்கான 4,000 எண்ணிக்கையான குறைந்த உயரமுடைய கொங்கிறீட் சிலிப்பர்களை கொள்வனவு செய்வதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை உள்நாட்டு தயாரிப்பாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து பெற்றுக் கொள்வார்.

2. சர்வேதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் மூலம் விலைமனுச் செயற்பாடானது நடாத்தப்படும்.

3. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து 2023.01.26 ஆந் திகதி முதல் 2023.02.21 ஆந் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப.3.00 மணி வரை ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),
புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078
அல்லது 94(11) 2436818
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
மின்னஞ்சல் : srs.slr@gmail.com
இணையத்தளம் : www.railway.gov.lk

4. விலைமனுதாரர்கள் கடந்த ஐந்து வருடங்களில் இலங்கை புகையிரத சேவைக்கு 5,000 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட கொங்கிறீட் சிலிப்பர்களை வழங்கியிருத்தல் அல்லது 50 மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட பெறுமதியுடைய முன் வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் தூண்கள் வழங்கியிருத்தல் அல்லது 500 மில்லியன் ரூபாவுக்கு மேற்பற்ற பெறுமதியுடைய முன் வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் கம்பங்களை வழங்கியிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைப்பட்டியல்களின் பிரதிகளையும் (copies of Invoices) இணைத்தல் வேண்டும்.

5. மீளளிக்கப்படாத கட்டணமாக 30,500.00 ரூபாவை செலுத்துவதன் பேரில் 2023.01.26 ஆந் திகதி முதல் 2023.02.21 ஆந் திகதி வரை பி.ப. 3.00 மணி வரையில் இலங்கையில் கொழும்பு -10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 1,700,000.00 ரூபா பெறுமதியுடைய நிபந்தனையற்ற உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.

07. விலைமனுக்கள் 2023.02.22 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),
புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகம்,
இலங்கைப் புகையிரத சேவைகள்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு
(மேல் நிலை),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

Ref.No.: SRS/ F.7898.

02-114

---

## இலங்கைப் புகையிரத சேவைகள்

விலைமனுக்கான அழைப்பு (IFB)

மேல் மாவட்டத்தின் நாவலப்பிட்டிய முற்றவெளிக்கு புகையிரதப் பாதை தண்டவாளங்களைப் பரீட்சிப்பதற்கு EN 45 E1 தண்டவாளங்களுக்கான 4000 எண்ணிக்கையான குறைந்த உயரமுடைய கொங்கிறீட் சிலிப்பர்களை வழங்குவதற்கான பெறுகை

பெறுகை இல.: SRS/ F. 7899

1. இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழு (மேஜர்) தவிசாளர், நாவலப்பிட்டிய முற்றவெளிக்கு புகையிரதப் பாதை தண்டவாளங்களைப் பரீட்சிப்பதற்கு EN 45 E1 தண்டவாளங்களுக்கான 4,000 எண்ணிக்கையான குறைந்த உயரமுடைய கொங்கிறீட் சிலிப்பர்களை கொள்வனவு செய்வதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை உள்நாட்டு தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து பெற்றுக் கொள்வார்.

2. சர்வேதேச போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் விலைமனுச் செயற்பாடானது நடாத்தப்படும்.

3. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து 2023.01.27ஆந் திகதி முதல் 2023.02.22 ஆந் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப.3.00 மணி வரை ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),
புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078
அல்லது 94(11) 2436818
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
மின்னஞ்சல் : srs.slr@gmail.com
இணையத்தளம் : www.railway.gov.lk

4. விலைமனுதாரர்கள் கடந்த ஐந்து வருடங்களில் இலங்கை புகையிரத சேவைக்கு 5,000 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட கொங்கிறீட் சிலிப்பர்களை வழங்கியிருத்தல் அல்லது 50 மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட பெறுமதியுடைய முன் வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் தூண்கள் வழங்கியிருத்தல் அல்லது 500 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய முன் வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் கம்பங்களை வழங்கியிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைப்பட்டியல்களின் பிரதிகளையும் (copies of Invoices) இணைத்தல் வேண்டும்.

5. மீளளிக்கப்படாத கட்டணமாக 30,500.00 ரூபாவை செலுத்துவதன் பேரில் 2023.01.27 ஆந் திகதி முதல் 2023.02.22 ஆந் திகதி வரை பி.ப. 3.00 மணி வரையில் இலங்கையில் கொழும்பு -10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 1,700,000.00 ரூபா பெறுமதியுடைய நிபந்தனையற்ற உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.

07. விலைமனுக்கள் 2023.02.23 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),
புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகம்,
இலங்கைப் புகையிரத சேவைகள்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு
(மேல் நிலை),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

Ref.No.: SRS/ F.7899

02-115

## இலங்கைப் புகையிரத சேவைகள்

பெறுகை அறிவித்தல்

இலங்கை புகையிரத சேவைக்கு தண்டவாளங்களை இணைக்கும் இரும்புக் கட்டை ( FISH PLATES) மரையாணி மற்றும் திருகாணிகள் வழங்குவதற்கான விலைமனுக்கோரல்

பெறுகை இல.: SRS F. 7903

1. இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழு (மேஜர்) தலைவரினால் தேசிய அளவிலான விலைகோரலின் அடிப்படையில் இலங்கை புகையிரத சேவைக்கு தண்டவாளங்களை இணைக்கும் இரும்புக் கட்டை (FISH PLATES) மரையாணி மற்றும் திருகாணிகள் வழங்குவதற்கான விலைமனுக்கோரல் வழங்குவதற்காக வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன. மனுதாரர்கள் தங்கள் மனுக்களை நேரடியாகவோ அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அங்கீகாரம் பெற்ற முகவருக்கு பகர அதிகாரம் பத்திர அதிகாரம் பெற்றவர் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம். சர்வதேச போட்டி ரீதியிலான ஏல அடிப்படையில் பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக பயனர் நிறுவனங்களால் வழங்கப்பட்ட செயல்திறன் சான்றிதழைக் கொண்டிருக்கும் உற்பத்தியாளர்கள் / வழங்குநர்களாக இருத்தல் வேண்டும்.

| *Item No.* | *Description* | *Qty* |
|---|---|---|
| 01 | Fish Plates 90(A) Lbs. (06 Holed) | 5,000Pairs |
| 02 | Fish Bolts & Nuts 90(A) Lbs. | 20,000 Nos. |
| 03 | Fang Bolts & Nuts 7 1/2"X3/4" | 10,000 Nos. |
| 04 | Bridge Hook Bolts & Nuts 13"x3/4" | 2,000 Nos. |
| 05 | Crossing Bolts with Nuts 6 1/2"x7/8" | 3,000 Nos. |
| 06 | Crossing Bolts with Nuts 8"x7/8" | 5,000 Nos. |

2. அனைத்துப் பொருட்களும் மதிப்பீடு செய்யப்பட்டு ஒன்றாக வழங்கப்படும்.

3. மீளச் செலுத்தப்படாத ரூ. 18,500.00 ஆவணக் கட்டணத்தினை செலுத்திப் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய படிவங்களில் மட்டுமே 2023.03.27 ஆந் திகதி பி.ப. 3.00 மணி வரை (இலங்கை நேரப்படி) மணிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. விலைமனுக்கள் 2023.03.28 ஆந் திகதி பி.ப. 2.00 (இலங்கை நேரப்படி) மணிக்கு மூடப்படும்.

5. மனுதாரர்கள் அவர்களின் விலைமனுவின் ஒரு பகுதியாக ரூபா 9,000,000 மனுப் பாதுகாப்பு பிணையாக சமர்ப்பிக்க வேண்டும்.

6. மூடப்பட்ட மனுக்கள் பதிவு தபாலா் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்பட வேண்டும்.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் (பெறுகை),
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

7. மனு ஆவணங்களை பிரதிப் பொது முகாமையாளர்(பெறுகை), ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, அலுவலகத்தில் இலவசமாகப் பரிசீலனை செய்ய முடியும்.

தொலைபேசி இலக்கங்கள்: 94(11) 2438078
அல்லது 94(11) 2436818
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
மின்னஞ்சல் : tender2@railway.gov.lk
இணையத்தளம் : www.railway.gov.lk

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு
(மேஜர்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

பெறுகை இல.: SRS/ F.7903.

02-116

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவுக்கமைவானது*

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ('சட்டம்') 244 (3) ஆம் பிரிவின்படி இத்தால் அறிவிக்கப்படுவதாவது, இச் சட்டத்தின் 242(2) ஆம் பிரிவுக்கு அமைவாக லயன் ப்ரூவரி ( சிலோன் ) பி.எல்.சி. (PQ 57) கம்பனியுடன் பேர்ள் ஸ்பிரிங்ஸ் ( பிரைவேட்) லிமிட்டெட் (PV 98633) கம்பனியை ஒன்றிணைக்கும் செயன்முறை நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1) (அ) பிரிவுக்கு அமைவாக கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் ஒரு ஒன்றிணைப்புச் சான்றிதழ் 2023, சனவரி 18 ஆந் திகதியன்று வழங்கப்பட்டுள்ளது.

*ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பெயர்:* லயன் ப்ரூவரி (சிலோன்) பி.எல்.சி.
*கம்பினியின் பதிவு செய்யப்பட்ட முகவரி:* இல.61, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
*ஒன்றிணைப்பு நடைமுறைக்கு வரும் திகதி:* 2023, சனவரி 31
*ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பதிவு இல.:* PQ 57

பணிப்பாளர் சபையின் பணிப்புரைக்கு அமைவாக,
லயன் ப்ருவரி ( சிலோன் ) பி.எல்.சி.,
கார்சன்ஸ் மெனேஜ்மன்ற் சேர்விசஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

2023.02.10.

02- 221

## அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

இன்வெரி தோட்டம், டிக்கோயா என்ற முகவரியைச் சேர்ந்த மேஜின் ஜூலியானா கந்தையா, இன்வெரி தோட்டம், டிக்கோயா என்ற முகவரியைச் சேர்ந்த ஆனால் தற்பொழுது இல. 46, ஹிஜிராபுர, ஹடுடுனு இல் வசிக்கும் தேவசகாயம் அந்தோனியம்மா ஆகிய என்னால் அளிக்கப்பட்ட ஹற்றன் பிரசித்த நொத்தாரிசு நா. பார்த்தீபன் என்பவரினால் வரையப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019.12.13 ஆந் திகதி இடப்பட்ட இல. 962, விசேட 2023.01.23 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்து இல்லாதொழிக்கின்றேன், அத்துடன் இதன் பின்னர் சொல்லப்பட்ட அற்றோணித்தத்துவத்தின் கீழ் அவரால் செய்யப்பட்ட எவ்வித செயலுக்கும் நான் பொறுப்பாளியல்ல எனவும் வெளிப்படுத்தி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறது.

மேஜின் ஜூலியானா கந்தையா.

02- 189

# ஏல விற்பனைகள்

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

டீ.ஜீ.ஜே. ஆர். புஷ்ப்பகுமார.
கணக்கு இல.: 0022 5002 0530.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.09.24ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.10.29ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2020.10.19ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பத்து கோடியே இருபத்தி எட்டு இலட்சத்து எண்பத்தி மூவாயிரத்து முந்நூற்று எண்பத்தி ஆறு ரூபா எட்டு சதம் (ரூபா 10,28,83,386.08) 2020, திசெம்பர் 02 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 3286, 3623, மற்றும் 3466 , 3468 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒன்பது கோடியே மூன்று இலட்சத்து எண்பத்தி ஆறாயிரம் ரூபா (ரூபா 9,03,86,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் நான்கு வீதம் (14%) மேலும் முப்பத்தி ஐந்து இலட்சத்து பத்தாயிரம் ரூபா (ரூபா 35,10,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரண்டு தசம் ஐந்து வீதம் (12.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள். 3286, 3623, 3466 மற்றும் 3468 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே. ஈ.சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.02.23ஆந் திகதி அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து காலை 11.00 மணிக்கும், அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து காலை 11.30 மணிக்கும், அட்டவணை 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து ந.ப. 12.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளே உடுகாஹா பத்துவையின் சீதாவக்கை நகர சபை எல்லைகளுக்குள் ஹங்வெல்லை பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் சீதாவக்கை இல. 432 B கிராம அலுவலர் பிரிவின் அவிஸ்ஸாவலையில் அமைந்த "மில்லகாஹாகும்புர எனும் கோன்காஹாகும்புர" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. வெலகெதர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, ஏப்பிறல் 25 ஆந் திகதியிடப்பட்ட (2010, ஏப்பிறல் 21 – 23 உப பிரிவும் மீள் அளவீடுமாகும்) இல. 4827 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கிற்கு: இல. 550 A எனும் வரைபடத்தின் லொட் 1; கிழக்கிற்கு: இங்கு லொட் 2; தெற்கிற்கு: வீதி மற்றும் மேற்கிற்கு: வீதி மற்றும் இல. 550 A எனும் வரைபடத்தின் லொட் 1 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் முப்பத்தி மூன்று தசம் எட்டு ஏழு ஐந்து பேர்ச் (0ஏ. 1றூ. 33.875பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4827 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 243/101 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 3286 மற்றும் 3623 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளே உடுகாஹா பத்துவையின் சீதாவக்கை நகர சபை எல்லைகளுக்குள் ஹங்வெல்லை பிரதேச செயலாளர் பிரிவின் சீதாவக்கை நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் சீதாவக்கை இல. 432/B கிராம அலுவலர் பிரிவின் அவிஸ்ஸாவலை இரத்தினபுரி வீதியில் அமைந்த "ஹல்காஹாகும்புர மற்றும் மில்லகாஹாகும்புர கோன்காஹாகும்புரவின் ஒரு பகுதி" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. வெலகெதர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, நவெம்பர் 22 ஆந் திகதியிடப்பட்ட (2019, யூன் 21 எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட) இல. 4002 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : டீ. ஜே. பீ. ரோஷான் குமார என்பவர் உரிமம் கோரும் இல. 5030 எனும் வரைபடத்தின் லொட் 1 A ; கிழக்கு : ஆறு கலகாஹாவத்த எனும் மினெரல் ஸ்பிரிங் எஸ்ட்டேட்; தெற்கு : இல. 550 A எனும் வரைபடத்தின் லொட் 3 மற்றும் மேற்கிற்கு வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் முப்பத்தி ஒன்று தசம் நான்கு ஒன்பது பேர்ச் (0ஏ. 1றூ. 31.49பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4002 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 282/57 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 3466 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

3. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளே உடுகாஹா பத்துவையின் சீதாவக்கை நகர சபை எல்லைகளுக்குள் ஹங்வெல்லை பிரதேச செயலாளர்

பிரிவின் மற்றும் சீதாவக்கை இல. 432 B கிராம அலுவலர் பிரிவின் அவிஸ்ஸாவலையில் அமைந்த "மில்லகாஹாகும்புர எனும் கோன்காஹாகும்புர" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. வெலகெதர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, ஏப்பிறல் 25 ஆந் திகதியிடப்பட்ட (2010, ஏப்பிறல் 21 - 23 உப பிரிவும் மீள் அளவீடுமாகும்) இல. 4827 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 02 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு : இல. 550 A எனும் வரைபடத்தின் லொட் 1 ; கிழக்கு : இல. 1449 எனும் வரைபடத்தின் லொட் A ; தெற்கு : வீதி மற்றும் மேற்கு : இங்கு லொட் 1, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் ஒன்பது தசம் ஏழு எட்டு ஐந்து பேர்ச் (0ஏ.1றூ. 9.785பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4827 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் B 280/32 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 3468 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

02- 222

---

## டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை

பகிரங்க ஏல விற்பனை

பனங்கல, தவலம என்ற இடத்தில் அமைந்துள்ள 07 ஏக்கர் 01 றூட் 34 பேர்ச் பரப்பளவுள்ள பயிர், இயந்திரங்களுடன் கூடிய பெறுமதிமிக்க தேயிலைத் தோட்டமும் தொழிற்சாலையும்.

தென் மாகாணம், காலி மாவட்டம், ஹினிதும பற்று, தவலம பிரதேச சபை மற்றும் பிதேச செயலக எல்லைக்குட்பட்ட பனங்கல கிராம அலுவலர் பிரிவில், பனங்கல என்னுமிடத்தில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜீ.எச். ஜீ.ஏ.ஏ.டி சில்வாவினால் வரையப்பட்ட 1988.01.02 ஆந் திகதிய 966 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 302 என்று விபரிக்கப்பட்ட (இறுதியாக மீள் வரையப்பட்ட கிராமிய வரைபடத்தில் லொட் 302 எனக் குறிப்பிடப்பட்ட ) "தனஹேன" என்று அழைக்கப்படும் பூமி முழுவதும் பின்வரும் பயிர்களும் இயந்திரங்களும்.

48 காமினி டீ ரோலர்கள் 15 எச்.பி. மோட்டர் - 03, 48 " வோக்கர் டீ ரோலர் 15 எச்.பி. மோட்டர் -01, 15 எச் .பி. மோட்டர் உடன் 46.5" சீ.சீ.சீ.டீ ரோலர் -01, 15 எச்.பி. மோட்டர் உடன் 44" சீ.சீ.சீ. டீ. ரோலர் -01, 15 எச்.பி.மோட்டர் உடன் 44" சீ.சீ.சீ. டீ. ரோலர் -01, 3.5 எச்.பி. மோட்டர் உடன் ரோல் பிரேக்கர் -03, 01 எச். பி. மோட்டருடன் மிச்சி சிப்டர் -14, மிடில்ஸ்டன் சிப்டர் 03, 3 டி ஸ்டோக் எக்ஸ்ரக்டர் -01, 2 எச்.பி. மோட்டருடன் சோட்டா சிப்டர் -01, சக்ஸன் வினோவர் -02, 84'*6^1*4" ட்ரோஸ்-05, 94'*6**4' ட்ரோஸ் -01, 66*4*4' ட்ரோஸ்06, ஹியுமிடிட்டி பேன் - 05, டஸ்ட் பேன் -02, 100 கே.வி.ஏ. ஜெனரேட்டர் -01, SENVEXகலர் செப்பரேற்றர் -02,6' ட்ரையர்-02, வூட் சிப்டர் -01, பைபர் எக்ஸ்ரக்டர் -02, NANTA கலர் செப்பரேற்றர் -01, 120 கே.வி.ஏ.டீசல் ஜெனரேட்டர் -01, 275 கே.வி.ஏ. டீசல் ஜெனரேட்டர் -01.

டீ.எப்.சீ.சீ. வங்கி பீஎல்சீ சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். அபேவிக்ரம வினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019.06.06 ஆந் திகதிய 2171 ஆம் இலக்க அடகு வைத்தற் பிணைக் கட்டப்பாட்டுக்கான கட்டணத்தை பொறுப்புதாரியாகிய அன்துன் பத்மின உடலமத்த கமகே மேற்கொள்ளத் தவறியமையினால் குறித்த வங்கியால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி, மேற்குறித்த ஆதனத்தை எதிர்வரும் 2023.02.28 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு ஸ்தலத்திலேயே பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவுள்ளேன்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 2022.11.25 ஆந் திகதிய இலங்கை அரச வர்த்தமானி, 2022.10.31 ஆந் திகதிய "திவயின", "த ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**வளாகத்தை அணுகும் முறை**- ஆதனத்தை சென்றடைவதற்கு காலிக்குச் சென்று அங்கிருந்து உடுகமை வீதி வழியாக உடுகமை வரைக்கும் சென்று அங்கிருந்து நெலுவ வீதியால் 1 மைல் தூரம் 6 கி.மீ. செல்ல வேண்டும். அங்கிருந்து சிறிது தூரம் சென்றால் தேயிலைத் தொழிற்சாலையும் தேயிலை உற்பத்தி நிலமும் வீதியில் வலது புறத்தில் அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.-கொள்வனவு செய்யும் நாட்டமுள்ளவர் ஏலம் முடிவுறுத்தப்படும் தருணத்தல் பின்வரும் முறையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்:-

(1) 10% கொள்வனவு விலை;
(2) 1% உள்ளூரதிகார சபை கட்டணம்;
(3) 2 1/2% ஏலமிடுவதற்கான கட்டணம் மற்றும் காசாளருக்கான கட்டணம் ரூபா 1500.00;
(4) விளம்பரப்படுத்துவதற்கான மொத்தக் கட்டணம்;
(5) இலிகிதர் மற்றும் காசாளருக்கான கட்டணம் ரூபா 1,500.00.

விற்பனையின் நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தியமைக்கான நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனைச் சான்றிதழின் முத்திரைக்கட்டணமும் ரூபா 3,000.00 முதலியன. எஞ்சிய 90% கட்டணமானது ஏலமிட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

ஆதன இடாப்புகள் மற்றும் ஏனைய ஆவணங்களைப் பரிசீலிக்க தொடர்பாடல், மீட்டெடுத்தலுக்கான முகாமையாளர், டீ.எப்.சீ.சீ. வங்கி பீஎல்சீ, இல. 73, வி.ஏ.டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02.

தொலைபேசி:011-2371371.

பி.கே.ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர்,
விலை மதிப்பீட்டாளர்,
பட்டய ஏலதாரர்.

இல. 134,
பெத்தகான வீதி,
கோட்டை.

தொலைபேசி இல.: 011-2873656, 0777-672082, தொலைநகல்: 011-2871184.

02- 176

---

**செலான் வங்கி பீஎல்சீ - பல்லேகெலே கிளை**
**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பகிரங்க ஏல விற்பனை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் (வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் பெறுமதிமிக்க ஆதனம் பகிரங்க ஏல விற்பனை*

கண்டியில் PV 100440 என்ற இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியான றோயல் பெக் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் கண்டியைச் சேர்ந்த நிலீமா ஸஜீவனி சமரசிங்ஹ கடப்பாடுடையவராகவும்/ஈடுவைத்த வராகவும் செலான் வங்கியின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு திருமதி ஜே.கே. நவரத்னவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.01.19 ஆந் திகதியிடப்பட்ட 1942 ஆம் இலக்க முறி மீதான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால்,

2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07ஆந்திகதி மு.ப.11.00 மணிக்கு செலான்வங்கி பீ.எல்.சீ. யினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீஎல்சீ, இல.90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள கிளை வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

இந்த ஏல விற்பனையானது சுகாதார அமைச்சின் கொவிட் 19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டலுக்கேற்ப நடாத்தப்படும்.

**அட்டவணை**

